# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 53 / 2022 நாள்: 21.02.2022

### நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் - 2022

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில் நகர்ப்புற உள்ளாட்சி சாதாரணத் தேர்தல் தொடர்பாக (22.02.2022) அன்று நடைபெறும் 268 வாக்கு எண்ணுகை மையங்களில் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு வாக்கு எண்ணிக்கை நடவடிக்கைகளை கண்காணித்திடவும், காவல்துறையினரின் மூன்றடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள், தடையில்லா மின்சார வசதி, கணினி வசதிகள், வாக்கு எண்ணுகை அலுவலர்கள், காவல்துறையினருக்கு தேவையான உணவு மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டது குறித்து விவாதிக்கப்பட்டது.**

21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகளுக்கான வாக்கு எண்ணிக்கை 268 மையங்களில் 22.02.2022 செவ்வாய்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு தொடங்கும். நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கான ஆயத்தப் பணிகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் காணொலிக் காட்சி (Video conferencing) வாயிலாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ.பழனிகுமார், இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையச் செயலாளர் திருமதி. எ. சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும், அனைத்து தேர்தல் பார்வையாளர்கள், மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் இன்று (21.02.2022) நடைபெற்றது.

இக்காணொலி ஆய்வுக்கூட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வாக்கு எண்ணிக்கை பணியின்போது பின்பற்றப்பட வேண்டிய பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

வாக்கு எண்ணுகை மையங்களில் சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டு நடவடிக்கைகளை கண்காணித்திடவும், தேவையான எண்ணிக்கையில் வாக்கு எண்ணுகை அலுவலர்கள் நியமனம் செய்தல், மேலும், வாக்கு எண்ணுகை மையங்களில் கோவிட்-19 வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்திடவும், அஞ்சல் வாக்கு எண்ணிக்கை, தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிவிப்பு செய்தல், போதிய எண்ணிக்கையில் காவல்துறையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள், தடையில்லா மின்சார வசதி, கணினி வசதிகள், உணவு மற்றும் குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டது குறித்து விவாதிக்கப்பட்டது.

மேலும், தேர்தல் முடிவுகளை இணையதளத்தில் பதிவு செய்தல், சான்றிதழ்-27 வழங்குதல், 2.3.2022 புதன்கிழமை அன்று, தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு உறுப்பினர்களின் முதல் கூட்டம் மற்றும் பதவி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறுதல் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர். இரா. செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. பா. பொன்னையா இ.ஆ.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) திரு. ஜி. வெங்கட்ராமன், இ.கா.ப., பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையர் திரு. விசு மகாஜன், இ.ஆ.ப., காவல் கண்காணிப்பாளர் (சைபர் க்ரைம்) திருமதி. சண்முகப்பிரியா, இ.கா.ப., முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு. தனலட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு. கி. அ. சுப்பிரமணியம், சட்ட ஆலோசகர் திரு க. வெங்கடேசன், உதவி ஆணையர் (தேர்தல்) திரு. அகஸ்ரீ சம்பத்குமார் மற்றும் ஆணைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

21/2/2022

மக்கள் தொடர்பு அலுவலர்